**Minutes of the Public Hearing conducted at Sri Lakshmi Vijayachandran Marriage Hall, located at Mangal Koot Road, Vembakkam Taluk, Tiruvannamalai District, on 16.07.2026 at 11.00 A.M., for the proposed M/s. A.P. Mines Ordinary Stone and Gravel Quarry Project over an extent of 3.04.2 hectares in Survey Nos. 175/1, 175/2, 180/3F, 180/3G, 180/4A, 180/4B, 180/4C, 180/4D, 180/4E, 180/4F, 180/5A and 180/5B of Gundiyanthandalam Village, Vembakkam Taluk, Tiruvannamalai District, for obtaining Environmental Clearance.**

**Participants:**

1. Thiru. J. Ramakrishnan,
   Deputy Collector,
   Tiruvannamalai.
   (Representative of the District Collector, Tiruvannamalai)

2. Thiru. V. Jayakumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

3. General Public
   As per enclosure.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, in his welcome address, stated that, with regard to obtaining Environmental Clearance for the proposed M/s. A.P. Mines Ordinary Stone and Gravel Quarry to be located at Survey Field Nos. 175/1, 2, 180/3F, 3G, 4A, 4B, 4C, 4D, 4E, 4F, 5A and 180/5B of Kundiyanthandalam Village, Vembakkam Taluk, Tiruvannamalai District, he expressed its great pleasure in welcoming the Deputy Collector who had graciously presided over the Public Hearing meeting, all the members of the public from the surrounding village areas who had assembled to offer their views at this event, members of the press, police personnel, environmental activists, and all those present on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board.

Further, he stated that, "As per the Environmental Impact Assessment

Notification, 2006, there is a provision that, in respect of such Ordinary Stone and Gravel Quarry projects, Environmental Clearance shall be granted only after obtaining the views of the local people at the time of processing the proposal for Environmental Clearance. Based on the said provision, the present meeting has been convened today to hear the views of the people of this area".

He further stated that, in this regard, the project proponent had submitted the requisite application to the Tamil Nadu Pollution Control Board one month in advance and had obtained permission from the District Collector for conducting today's event. He further stated that, in connection with this event, a public notice was published on 04.06.2026, in Tamil and English daily newspapers for the information of the general public. Thereafter, the said information was also made available to the public through the official website of the Tamil Nadu Pollution Control Board.

Recently, as a reminder regarding today's event, two days in advance, pamphlets were distributed, posters were affixed, and announcements were made through a vehicle fitted with a public address system in all the surrounding villages and at places where the general public gather in large numbers, thereby reminding the public once again about the details of this event.

In pursuant to the above, a large number of people had assembled in this hall today. If the members of the public recorded their views on the project clearly and briefly before the authorities, the entire proceedings of the meeting would be recorded through audio and video, forwarded to the State Government, placed before the Environmental Impact Assessment Authority for its consideration and Environmental Clearance would thereafter be granted to the project proponent.

As the first item of the programme, the Deputy Collector would address the gathering with a few words to welcome all the members of the public who had participated in the Public Hearing.

**<u>Deputy Collector, Tiruvannamalai</u>**

The Deputy Collector stated that the members of the public of Kundiyanthandalam Village had been invited on behalf of the District Administration to participate in this Public Hearing meeting. Your views may be recorded, and that, after obtaining the necessary orders from the

Government then they can be able to do. He further requested each member of the public to express their views briefly, as an opportunity should be given to everyone to present their views. Therefore, on behalf of the District Administration, he requested the members of the public to record their views.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai**

The District Environmental Engineer informed the gathering that, first, the Project Consultants who had prepared the project would present the details of the proposed project through an audio-visual presentation. He requested the members of the public to carefully observe the presentation, understand the Pros and Cons of the project, and thereafter express their views by stating their names and the names of their respective villages.

He further informed that the Project Consultants would first make the audio-visual presentation on the project details before the gathering.

**Environmental Impact Assessment Consultant, M/s. Geo Exploration & Mining Solutions, Salem**

Thiru M. Sheikh Nawaz, Project Consultant, M/s. Geo Exploration & Mining Solutions, Salem, conveyed his greetings to the Honourable Deputy Collector, the Honourable District Tourism Officer, the other Government officials, and all the members of the public who had assembled for the Public Hearing. He then explained the details of the proposed project as follows,

1. Public Hearing
   i. M/s. A.P. Mines – Ordinary Stone and Gravel Quarry
   ii. Project Proponent
   iii. Project Location
   iv. Venue of the Public Hearing
2. Newspaper Advertisement for the Public Hearing
3. Distribution of Public Notice for the Public Hearing
4. Introduction to the Mining Project
   i. Application Details
   ii. Approval of the Mining Plan
   iii. Environmental Impact Assessment (EIA) Notification, 2006

iv. Terms of Reference (ToR)
v. Requirement for Conduct of Public Hearing

5. Location Map of the Project Site
6. Project Details of the Quarry
7. Features Surrounding the Project Site
8. Satellite Imagery of the 500 m Radius Area
9. Photographs of the Project Site
   i. Satellite Image of the Project Area
   ii. Surface Plan of the Project Area
10. Mineral Reserves and Proposed Quantity of Extraction
11. Mineral Reserves and Proposed Quantity of Extraction
   i. Proposed Final Pit Dimensions for Mining Operations
12. Details of Mines within the 500 m Radius
13. Features within the 10 km Study Area
14. Land Use Pattern within the 10 km Study Area
15. Baseline Data Map of the 10 km Study Area
16. Baseline Environmental Monitoring
17. Location Map Showing Soil Sampling Stations
18. Land Environment
19. Soil Environment
20. Satellite Image of Water Quality Monitoring Locations
   i. Water Quality
21. Wind Rose Diagram
22. Location Map Showing Air Quality Monitoring Stations
23. Results of Air Quality Monitoring
   i. Ambient Air Quality
24. Satellite Image of Noise Monitoring Locations
25. Results of Noise Monitoring
26. Anticipated Environmental Impacts and Mitigation Measures
   i. Land Environment
   ii. Water Environment
   iii. Air Environment
   iv. Noise Environment
   v. Biological Environment
   vi. Socio-economic Environment

27. Environmental Impact Assessment
    i. Anticipated Air Environment Impacts and Mitigation Measures
28. Mitigation Measures
    i. Air Pollution Control Measures
29. Anticipated Noise Environment Impacts and Mitigation Measures
    i. Anticipated Impacts
    ii. Mitigation Measures
30. Anticipated Water Environment Impacts and Mitigation Measures
    i. Mitigation Measures
31. Water Sprinkling on Haul Roads
    i. Dust Suppression Measures
32. Development of Green Belt
33. Technology and Site
    i. Environmental Monitoring Programme
    ii. Additional Risk and Disaster Management Plan
34. Project Benefits
    i. Environmental Management Plan
    ii. Occupational Health and Safety
35. Project Benefits
    i. Financial Benefits (CER, Seigniorage Fee, District Mineral Foundation (DMF), Green Tax and Mineral Bearing Land Tax)
36. Conclusion

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai**

Following the above explanatory address, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, stated that those members of the public who wished to express their views might now come forward one after another and record their views in the hall. The members of the public coming forward to express their views were requested to clearly state their names and the names of the villages to which they belong and thereafter express their views. They were requested to confine their remarks only to matters relating to the proposed project. They were further requested to express their views briefly and clearly in such a manner that they could be properly recorded through the public address system.

Accordingly, the following members of the public expressed their views and suggestions.

**1. Thiru. Muthu, Former President, Kundiyanthandalam Village Panchayat:**

Thiru. Muthu stated that he welcomed the Deputy Collector, the officials of the Tamil Nadu Pollution Control Board, the Tahsildar, the Revenue Inspector, the Village Administrative Officers, and all other Government officials who had attended the Public Hearing.

He wished to briefly express his views regarding the advantages and disadvantages of the proposed quarry project in Kundiyanthandalam Village Panchayat.

The proposed A.P. Mines quarry is situated far away from their village and, therefore, it would not cause any adverse impact on the village. Hence, the villagers do not anticipate any problem due to the proposed quarry.

He further stated that more than one hundred school children from the surrounding villages use the road to travel to school. He pointed out that a few quarry lorries travel at high-speed carrying heavy loads, resulting in dust emission affecting the eyes of the school children. Therefore, he requested that water should be sprinkled twice a day, in the morning and evening to suppress the fugitive emission.

Since the proposed A.P. Mines quarry would not have any adverse impact on their Village Panchayat, they had no objection to the Tamil Nadu Pollution Control Board granting consent for the project. Accordingly, he requested that permission may be granted for establishing the quarry and concluded his speech.

**2. Thiru Raja, Former President, Kundiyanthandalam Village Panchayat:**

Thiru Raja stated that he was the former President of Kundiyanthandalam Village Panchayat. He welcomed the Deputy Collector, the Environmental Engineer and all the members of the public present at the Public Hearing.

He stated that the proposed A.P. Mines quarry is located in Kundiyanthandalam and is situated about 2 km away from the village. He

further stated that the establishment of the quarry would ensure the local availability of M-sand, jelly and other construction materials.

He further stated that a large number of saplings have been planted and are being protected because of the quarry operations. He added that, during his tenure as Panchayat President, several development works amounting to approximately Rs. 10 crores had been implemented through mineral development funds. These included the construction of school buildings, health centres, BT roads, cement concrete roads and drainage facilities.

He further stated that even now also the Kundiyanthandalam – Senniyanallur BT Road has also been laid. Therefore, he expressed that he had no objection to the proposed A.P. Mines quarry and requested the authorities to grant permission for the project without delay.

**3. <u>Thiru. Anbarasan, Chinna Elacheri Village</u>:**

Thiru. Anbarasan stated that the proposed quarry would provide employment opportunities, such as Supervisor jobs, to youngsters like him. He further stated that the quarry serves as an example in improving their economic condition. Therefore, he welcomed the establishment of the proposed quarry.

**4. <u>Thiru. Lakshmanan, Former Ward Member, Kundiyanthandalam Village</u>:**

Thiru. Lakshmanan stated that he was the former ward Member of Kundiyanthandalam Village. He stated that he had no objection to the proposed A.P. Mines quarry and requested the authorities to grant permission for the project.

**5. <u>Thiru. Nagaraj, Chinna Elacheri Village</u>:**

Thiru Nagaraj stated that he belongs to Chinna Elacheri Village. He stated that the proposed quarry would provide employment opportunities and welcomed the establishment of the proposed quarry. He concluded his speech by expressing his thanks.

**6. <u>Thiru Gopinath, Chinna Elacheri Village</u>:**

Thiru Gopinath stated that, "My name is Gopinath. I have come from Chinna Elacheri Village. The reason why we welcome the proposed A.P. Mines stone quarry at Kundiyanthandalam is that it will provide employment

opportunities for educated youth as well as for women. Further, if this stone quarry is established at Kundiyanthandalam, many people in the area will definitely benefit. Through this stone quarry, good tar roads and other rural infrastructure facilities will be provided. Further, the project proponent has extended several welfare measures to the school, such as providing drinking water facilities, school uniforms, tables, chairs, and many other beneficial schemes. In short, many useful welfare measures have been implemented. As a result, the students in the locality will benefit greatly. Therefore, I welcome the establishment of this stone quarry."

**After that, no representation continued from the public for providing comments.**

**<u>District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai</u>**

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, stated that if any other member of the public willing to express his/her views, they might come forward and do so. He further stated that those who wished to submit their views directly through written representations might submit their petitions before the officials present in the hall.

After the members of the public had submitted their petitions, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, expressed his sincere thanks, on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board, to all the members of the public who had participated in the Public Hearing and expressed their views both orally and through written petitions, as well as to all the other Government officials, members of the press and police personnel who had attended the event.

He further informed that all the views recorded during the Public Hearing, together with the audio and video recordings of the entire proceedings and the Tamil and English transcripts of the minutes of the meeting, would be submitted to the Environmental Impact Assessment Authority of the Government of Tamil Nadu, with the approval of the District Collector, for the purpose of granting Environmental Clearance. He further informed that all the views expressed by the public would be placed before the Authority and would be taken into consideration while granting Environmental Clearance, wherever applicable.

Thereafter, he declared that the proceedings of the Public Hearing stood concluded and thanked everyone for their participation.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Deputy Collector,**
**Tiruvannamalai.**

**<u>மாங்கால் கூட்ரோடு, வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ லக்ஷ்மி விஜயச்சந்திரன் திருமண மண்டபத்தில் 16.07.2026 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், குண்டியாந்தண்டலம் கிராமம், புல எண்கள் 175/1, 175/2, 180/3F, 180/3G, 180/4A, 180/4B, 180/4C, 180/4D, 180/4E, 180/4F, 180/5A மற்றும் 180/5B ஆகிய புல எண்களில் 3.04.2 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். A.P. மைன்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்:</u>**

**<u>பங்கேற்றோர்:</u>**

1. திரு. ஜெ. ராமகிருஷ்ணன்,
   துணை ஆட்சியர்,
   திருவண்ணாமலை
   (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி)

2. திரு. வெ. ஜெயக்குமார்
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   திருவண்ணாமலை.

3. பொதுமக்கள்
   இணைப்பில் உள்ளபடி

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை</u>**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் தனது வரவேற்புரையில்", திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், குண்டியாந்தண்டலம் கிராமத்தில் புல எண்கள் 175/1, 2, 180/3F, 3G, 4A, 4B, 4C, 4D, 4E, 4F, 5A மற்றும் 180/5B –ல் அமையவுள்ள தி/ள். A.P. மைன்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று வருகை தந்திருக்கும் துணை ஆட்சியர் அவர்களையும் இந்நிகழ்விற்கு கருத்துக்களை கூற

பெறுவாரியாக திரண்டு இருக்கும் கிராம பகுதிகளை சேர்ந்த அனைத்து பொதுமக்களையும் பத்திரிகை நண்பர்களையும் காவல்துறை அன்பர்களையும் சூழலியல் செயல்பாட்டார்களையும் வருக வருக என மாவட்ட நிர்வாகம் சார்பாகவும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் சார்பாகவும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்

மேலும் அவர் கூறுகையில், ஏற்கனவே 2006–ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, இதுபோன்ற சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கத் திட்டங்கள் தொடர்பாக சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் போது நிகழ்வின்போது, அப்பகுதிவாழ் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்ட பின்பு அந்நிறுவனங்களுக்கான சுற்றுச்சூழல் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின் அடிப்படையில் இப்பகுதியைச் சார்ந்த தங்களது கருத்துக்களைக் கேட்க இந்நிகழ்வு இன்று கூட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்நிறுவனத்தால கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாகவே இதற்குரிய விண்ணப்பத்தை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று இன்றைய நிகழ்விற்கு அனுமதி பெற்றிருந்தார்கள். இது தொடர்பாக ஒரு மாதத்திற்கு முன்பு, 04.06.2026 அன்று தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் இந்நிகழ்வு தொடர்பான செய்தி வெளியீடு பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டிருந்தது. அதை தொடர்ந்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் இத்தகவல் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மீண்டும் இன்றைய நிகழ்வு குறித்த நினைவூட்டும் விதமாக, இரண்டு நாட்களுக்கு முன்பு இப்பகுதியைச் சுற்றிய அனைத்து கிராமங்களிலும் பொதுமக்கள் பெருமளவில் கூடும் இடங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், சுவரொட்டிகள் ஒட்டுதல் மற்றும் வாகனம் மூலம் ஒலிபெருக்கியில் தங்களுக்கு இந்நிகழ்வு தொடர்பான விவரங்கள் மீண்டும் நினைவூட்டப்பட்டிருந்தது.

அதை ஒட்டி, இன்று இந்த அரங்கத்தில் பெருவாரியாகக் கூடியுள்ளீர்கள். இந்தத் திட்டம் தொடர்பான தங்களது கருத்துக்களை தெளிவாகவும் சுருக்கமாகவும் நீங்கள் எங்கள் முன் பதிவு செய்தால், ஒட்டுமொத்த கூட்ட நடவடிக்கைகளும் ஒலி, ஒளி வாயிலாகப் பதிவு செய்யப்பட்டு, மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் கவனத்தில் கொள்ளப்பட்டு

இந்நிறுவனத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்படும் என்று தங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவதாக, இவ்விழாவில் கலந்து கொண்டிருக்கும் அனைத்து பொதுமக்களையும் துணை ஆட்சியர் வரவேற்கும் விதத்தில் ஓரிரு வார்த்தைகள் தெரிவிப்பார்.

**<u>துணை ஆட்சியர், திருவண்ணாமலை</u>**

இந்த கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டுள்ள குண்டியாந்தண்டலம் கிராம பொதுமக்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக உங்களை வந்து அழைத்திருக்கிறோம். உங்கள் கருத்தை நீங்கள் பதிவு செய்யலாம். அதனை பதிவு செய்து அரசிடமிருந்து அதற்கான உத்தரவு பெற்ற பின்னர் அவர்களுக்கு இது செய்ய முடியும். பொதுமக்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களை கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். எல்லோருக்கும் நாம் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதனால் உங்கள் கருத்துக்களை பதிவு செய்ய, மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை</u>**

முதலாவதாக, இந்தத் திட்டம் குறித்த விவரங்களை இந்தத் திட்டத்தைத் தயாரித்த திட்ட ஆலோசகர்கள் ஒளிப்படக் காட்சியின் மூலம் தங்கள் முன் வெளியிடுவார்கள். அதனை உற்று நோக்கியும், கூர்ந்து கவனித்தும், அதில் உள்ள சாதக, பாதக அம்சங்களை நீங்கள் உள்வாங்கிக் கொண்டு, தொடர்ந்து பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்களின் பெயர், தாங்கள் சார்ந்த கிராமத்தின் பெயர் ஆகியவற்றைத் தெரிவித்துவிட்டு, தங்கள் தரப்புக் கருத்துக்களை பதிவு செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதலாவதாக, திட்ட ஆலோசகர்கள் திட்ட விவரங்களை ஒளிப்படக் காட்சியின் மூலம் தங்கள் முன் பார்வைக்கு வழங்குவார்கள்..

**<u>சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், தி/ள். ஜியோ எக்ஸ்ப்லோரேஷன் & மைனிங் சொலுஷன்ஸ், சேலம்</u>**

திரு. M. ஷேக் நவாஸ், திட்ட ஆலோசகர், தி/ள். ஜியோ எக்ஸ்ப்லோரேஷன் & மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள், பொதுமக்கள் கருத்துக் கேட்புக்

கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மரியாதைக்குரிய துணை ஆட்சியர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய மாவட்ட சுற்றுலா அலுவலர் அவர்களுக்கும், ஏனைய அரசு அலுவலர்களுக்கும் மற்றும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அனைத்து பொதுமக்களுக்கும் எனது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி, உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு விளக்கினார்,

1. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம்
    i. M/s. A.P. மைன்ஸ் – சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்
    ii. திட்ட உரிமையாளர்
    iii. திட்ட இருப்பிடம்
    iv. கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் இடம்
2. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கான செய்தித்தாள் விளம்பரம்
3. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கான விளம்பர நோட்டீஸ் வழங்குதல்
4. சுரங்கத்தினை பற்றி ஓர் அறிமுகம்
    i. விண்ணப்ப விவரங்கள்
    ii. சுரங்கத்திட்ட ஒப்புதல்
    iii. EIA Notification, 2006
    iv. ToR (Terms of Reference)
    v. பொதுமக்கள் கருத்து கேட்பு அவசியம்
5. திட்டதளத்தின் இருப்பிட வரைப்படம்
6. சுரங்கத்தின் திட்ட விவரங்கள்
7. திட்டதளத்தை சுற்றியுள்ள அம்சங்கள்
8. செயற்கைக்கோள் புகைப்படம் – 500 மீ சுற்றளவு
9. திட்டத்தளத்தின் புகைப்படம்
    i. திட்டப்பகுதியின் செயற்கைக்கோள் படம்
    ii. திட்டப்பகுதியின் மேற்பரப்பு வரைபடம்
10. கனிம வளங்கள் இருப்புகள் மற்றும் வெட்டி எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அளவுகள்
11. கனிம வளங்கள் இருப்புகள் மற்றும் வெட்டி எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அளவுகள்
    i. சுரங்கப்பணி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இறுதி குழியின் அளவுகள்

12. சுரங்கங்களின் விவரங்கள் – 500 மீ சுற்றளவு

13. 10 கி.மீ. சுற்றளவில் இருக்கும் அம்சங்கள்

14. 10 கி.மீ. சுற்றளவில் இருக்கும் நிலப்பயன்பாடு

15. 10 கி.மீ. சுற்றளவு அடிப்படை தரவு வரைபடம்

16. அடிப்படை சுற்றுச்சூழல் கண்காணிப்பு

17. மண் மாதிரி சேகரிக்கப்பட்ட இடத்தின் வரைபடம்

18. நில சுற்றுப்புற சூழ்நிலை

19. மண் சுற்றுப்புற சூழ்நிலை

20. நீர் தன்மை ஆய்வு செய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்

    i. நீரின் தன்மை

21. காற்று வீசும் திசையின் புகைப்படம்

22. காற்று கண்காணிப்பு செய்யப்பட்ட இடத்தின் வரைபடம்

23. காற்று கண்காணிப்பு ஆய்வின் முடிவுகள்

    i. காற்றின் தன்மை

24. ஒலி அளவு ஆய்வின் செய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்

25. ஒலி அளவு ஆய்வின் முடிவுகள்

26. எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

    i. நில சுற்றுச்சூழல்
    ii. நீர்ச்சூழல்
    iii. காற்றுச்சூழல்
    iv. ஒலிச்சூழல்
    v. உயிரியல் சூழல்
    vi. சமூக பொருளாதார சூழல்

27. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

    i. எதிர்நோக்கும் காற்று சூழல் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

28. தணிப்பு நடவடிக்கைகள்

    i. காற்று மாசு தடுப்பு நடவடிக்கைகள்

29. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் ஒலி சூழல் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

    i. எதிர்பார்க்கப்படும் தாக்கங்கள்

ii. தணிப்பு நடவடிக்கைகள்

30. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் நீர் சூழல் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

i. தணிப்பு நடவடிக்கைகள்

31. சாலைகளில் நீர் தெளித்தல்

i. தூசி கட்டுப்பாடு

32. பசுமை அரண் அமைத்தல்

33. தொழில்நுட்பம் மற்றும் தளம்

i. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம்

ii. கூடுதல் அபாயங்கள் மற்றும் இடர் மேலாண்மை திட்டம்

34. திட்ட நன்மைகள்

i. சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்

ii. தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

35. திட்ட நன்மைகள்

i. நிதி நன்மைகள் (CER, Seigniorage, DMF, Green Tax, Mineral Bearing Land Tax)

36. முடிவுரை

<u>**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை**</u>

மேற்கூறிய விளக்கவுரையை தொடர்ந்து, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் இப்பொழுது பொதுமக்கள் கருத்து கூற விரும்புபவர்கள் ஒருவரின் பின் ஒருவராக வந்து இந்த அரங்கில் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம். கருத்துக்களை கூற வரும் பொதுமக்கள் தங்கள் பெயரைத் தெளிவாகவும், தாங்கள் சார்ந்த கிராமத்தின் பெயரையும் குறிப்பிட்டு, தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். திட்டம் தொடர்பான கருத்துக்களை மட்டும் தெரிவிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அந்தக் கருத்துக்களை சுருக்கமாகவும், ஒலிபெருக்கியில் பதிவு செய்யும் விதத்தில் தெளிவாகவும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது..

**அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.**

**1. திரு. முத்து முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் குண்டியாந்தண்டலம் கிராமம்:**

திரு. முத்து அவர்கள் கூறுகையில், இன்று இந்த மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாவட்டத்தின் துணை ஆட்சியர் அவர்களே, சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அலுவலர் அவர்களே, மற்றும் வட்டாட்சியர் அவர்களே, வருவாய் ஆய்வாளர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்களே மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் வணக்கம்.

இந்த குண்டியாந்தண்டலம் ஊராட்சியில் கல்குவாரி அமைவதனால் என்னென்ன நன்மைகள், தீமைகள் என்பதைச் சுருக்கமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஏ.பி. மைன்ஸ் கிட்டத்தட்ட எங்கள் ஊருக்கு அப்பாற்பட்ட பகுதியில் உள்ளது. அதாவது, எங்கள் ஊருக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல், ஊரிலிருந்து அதிகமான தூரத்தில் தான் அமைந்துள்ளது. அதனால் எங்களுக்கு எந்த ஒரு பிரச்சினையும் இல்லை.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். எங்கள் ஊர் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிச் செல்வங்கள் பள்ளிக்குச் செல்கிறார்கள். அவர்கள் சாலையில் செல்லும் போது, ஒரு சில சம்பந்தப்பட்ட கல்குவாரி லாரிகள் அதிவேகமாகவும், அதிக பாரம் ஏற்றிக்கொண்டும் செல்வதால் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் போது அவர்களின் கண்களில் தூசி படுகிறது. அதனால், இரண்டு முறை கண்டிப்பாக காலை மற்றும் மாலையிலும் சாலையில் தண்ணீர் ஊற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஏ.பி. மைன்ஸ் அமைந்திருப்பதால் எங்கள் ஊராட்சிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. ஆகையால், இவர்களுக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி வழங்குவதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எனவே, இவர்களின் கல்குவாரி அமைக்க அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, இதனுடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன் என்றார்.

**2. திரு. ராஜா, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், குண்டியாந்தண்டலம் கிராமம்:**

**திரு. ராஜா அவர்கள் கூறுகையில், "என் பெயர் ராஜா. நான் குண்டியாந்தண்டலம் கிராமத்தின் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர். இங்கு வருகை புரிந்துள்ள துணை**

ஆட்சியர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கம்." என்றார்.

இந்த ஏ.பி. மைன்ஸ் குண்டியாந்தண்டலத்தில் அமைவதால், இது ஊரிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த கல்குவாரி வருவதினால் எம்–சாண்ட், ஜல்லி போன்றவை பக்கத்திலேயே கிடைத்துவிடுகின்றன.

மேலும், இந்த கல்குவாரி இருப்பதினால் மரக்கன்றுகள் அதிக அளவில் நட்டு பாதுகாக்கப்படுகின்றன. இந்த கனிமவளத் திட்டத்தின் மூலம் நான் தலைவராக இருந்தபோது சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக பள்ளிக் கட்டிடங்கள், சுகாதார மையங்கள், தார்ச் சாலைகள், சிமெண்ட் சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போது கூட பார்த்தீர்கள் என்றால், குண்டியாந்தண்டலம் – சென்னியநல்லூர் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால், இந்த ஏ.பி. மைன்ஸ் வருவதில் எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை என்று கூறி, தாமதிக்காமல் அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

<u>3. திரு. அன்பரசன், சின்ன ஏழச்சேரி கிராமம்:</u>

திரு. அன்பரசன் அவர்கள் கூறுகையில், இந்த கல்குவாரி வருவதால் எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு சூப்பர்வைசர் போன்ற வேலை கிடைக்கிறது. எங்கள் பொருளாதாரம் முன்னேற இந்த கல்குவாரி உதாரணமாக இருக்கிறது. ஆகையால், இந்த கல்குவாரி வருவதை வரவேற்கிறேன் என்றார்.

<u>4. திரு. லட்சுமணன், முன்னாள் வார்டு உறுப்பினர், குண்டியாந்தண்டலம் கிராமம்:</u>

திரு. லட்சுமணன் அவர்கள் கூறுகையில், "என் பெயர் லட்சுமணன். நான் குண்டியாந்தண்டலம் கிராமத்தின் முன்னாள் வார்டு உறுப்பினர். இந்த ஏ.பி. மைன்ஸ் வருவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. தாராளமாக அனுமதி வழங்கலாம். அவருக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்." என்றார்.

**5. திரு. நாகராஜ், சின்ன ஏழச்சேரி கிராமம்:**

திரு. நாகராஜ் அவர்கள் கூறுகையில், "என்னுடைய பெயர் நாகராஜ். நான் சின்ன ஏழச்சேரி கிராமத்தைச் சேர்ந்தவன். இந்த கல்குவாரி வருவதால் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இந்த கல்குவாரி வருவதை வரவேற்கிறோம்" என்று கூறி நன்றி தெரிவித்தார்.

**6. திரு. கோபிநாத், சின்ன ஏழச்சேரி கிராமம்:**

திரு. கோபிநாத் அவர்கள் கூறுகையில், "என் பெயர் கோபிநாத். நான் சின்ன ஏழுச்சேரி கிராமத்திலிருந்து வந்திருக்கிறேன். இந்த ஏ.பி. மைன்ஸ் குண்டியாந்தண்டலத்தில் வருவதற்காக இந்த கல்குவாரியை நாம் எதற்கு வரவேற்கிறோம் என்றால், வேலைவாய்ப்பைப் பார்த்தீர்கள் என்றால் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது. மகளிருக்கும் அதேபோல் வேலைவாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியில், குண்டியாந்தண்டலத்தில் பார்த்தீர்கள் என்றால், கண்டிப்பாக இந்த கல்குவாரி வந்ததென்றால் பல பேர் பயனடைவார்கள். இந்த கல்குவாரி மூலமாகப் பார்த்தீர்கள் என்றால் நல்ல தார்ச் சாலைகள், கிராமப்புற வசதிகள் கிடைக்கின்றன. இந்த மாதிரி ஸ்கூலைப் பார்த்தீர்கள் என்றால், ஸ்கூலுக்கு பல நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், ஸ்கூலுக்கு தண்ணீர் வசதி, ஸ்கூல் சீருடை, டேபிள், சேர் இன்னும் பல நல்ல திட்டங்கள். இந்த மாதிரி பார்த்தீர்கள் என்றால் நிறைய பயனுள்ள திட்டங்கள் பண்ணிக் கொடுக்கிறார்கள். இதனால் அங்குள்ள பகுதி மாணவர்கள் நல்ல பயனடைவார்கள். இந்த கல்குவாரி வருவதை நான் வரவேற்கிறேன்." என்றார்.

**அதன் பின்னர், பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்து தெரிவிக்க யாரும் முன்வரவில்லை.**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் வேறு யாரேனும் கருத்து கூறுவதாக இருந்தால் வந்து கூறலாம் என்றார். மேலும், நேரடியாக தங்கள் கருத்துக்களை மனுக்கள் வாயிலாக தெரிவிக்க வேண்டியவர்கள், மனுக்களை

இவ்வரங்கில் அதிகாரிகள் முன்பு சமர்ப்பிக்கலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது என்றார்.

பொதுமக்கள் தங்களது மனுக்களை வழங்கிய பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், இந்நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களையும், மனுக்கள் வாயிலாக தங்களது கருத்துக்களையும் தெரிவித்த பொதுமக்கள், இதர அரசு அலுவலர்கள், பத்திரிக்கை நண்பர்கள், காவல்துறை அன்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் சார்பாகவும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பதிவு செய்யப்பட்ட அனைத்து கருத்துக்களும் ஒலி, ஒளி வாயிலாகவும், கூட்ட நடவடிக்கைகளின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் அனைத்தும் உரிய மாவட்ட ஆட்சியரின் அனுமதியோடு தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு, சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் பொருட்டு சமர்ப்பிக்கப்படும். அங்கு தங்களது அத்தனை கருத்துக்களும் அனுமதி வழங்கும் பட்சத்தில் கருத்தில் கொள்ளப்படும் என்ற தகவலைத் தெரிவித்து, இதோடு இன்றைய நிகழ்வு முடிக்கப்படுகிறது. நன்றி. வணக்கம் என்றார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை.**

**துணை ஆட்சியர்,**
**திருவண்ணாமலை.**
(5/6)